**அசல் வழக்கு எண். 255/2018 வா.சா. 2 செல்வராசு த/பெ. அரங்குளவன் தேதி 22.09.2022**

**குறுக்கு விசாரணை**

நான் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கப்படவில்லை. இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க வேண்டும் என்று நீதிமன்றத்திலிருந்து எனக்கு அழைப்பாணை எதுவும் வரவில்லை. வாதி மெய்யப்பன் அழைத்தன்பேரிலேயே நான் சாட்சியம் அளிக்கவந்தேன். வாதி மெய்யப்பன் எனக்கு நெருங்கிய உறவினர். எனக்கு பாப்பன்பட்டியில் சுமார் 7 செண்ட் புன்செய் நிலம் உள்ளது. அதில் நான் மல்லிகைப்பூ பயிரிட்டுள்ளேன். எனது மேற்கண்ட இடத்திற்கு அருகிலேயே வாதி மெய்யப்பனின் இடம் உள்ளது. அதில் அவர் போர்வெல் அமைத்து விவசாயம் செய்து வருகிறார். எனது விவசாய நிலத்திற்கு வாதியின் போர்வெல்லிலிருந்துதான் தண்ணீர் பாய்ச்சுகிறேன். வாதியின் விவசாய இடத்தில் நானும் வேலை பார்ப்பேன். இந்த வழக்கின் விபரம் எனக்கு தெரியும். வாதி மெய்யப்பன் செல்லையா மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார். எத்தனை பேர் மீது வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் ஒருவர் மீதுதான் வழக்கு தாக்கல் செய்துள்ளார். எத்தனை அயிட்ட சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் ஒரே அயிட்ட சொத்திற்குதான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கு சொத்தின் நான்கெல்லை, சர்வே எண், விஸ்தீரணம் என்ன என்பது எனக்கு தெரியும். வழக்கு சொத்திற்கு யார் பெயரில் பட்டா உள்ளது, பட்டா எண் ஆகியனவும் எனக்கு தெரியும். வழக்கு சொத்தின் பட்டா வாதியின் தகப்பனார் பெயரில் இருந்தது. அவர் இறந்துவிட்டதால் தற்போது வாதியின் பெயருக்கு ஏற்பட்டுள்ளது. வழக்கு சொத்தின் பட்டா வாதியின் பெயருக்கு ஏற்பட்டுள்ள பட்டாவை நான் பார்க்கவில்லை. வழக்கு சொத்தின் பட்டா எண் 363/24 ஆகும். வழக்கு சொத்தின் பட்டா எண் 363/24 என்பது வாதி சொல்லியதன் பேரில் எனக்கு தெரியவந்தது. மேற்படி பட்டா எண் 363/24 ஆவணத்தினை வாதி என்னிடம் இதுவரை காட்டவில்லை. வழக்கு சொத்தினை வாதி எதனடிப்படையில் தனக்கு சொந்தம் என்று கட்சி செய்கிறார் என்றால் வழக்கு சொத்து வாதியின் தகப்பனார் காலத்திலிருந்தே அவர்களது அனுபவத்தில் இருந்து வருகிறது. அதன்பேரில் கட்சி செய்தார். வழக்கு சொத்திற்கான பட்டா வாதியின் தகப்பனார் பெயருக்கு இருந்ததை நான் பார்க்கவில்லை. வழக்கு சொத்து வாதி மற்றும் வாதியின் தகப்பனாருக்கு பாத்தியப்பட்டது என்பதை காட்டுவதற்கான வேறு ஆவணங்கள் எதையும் நான் பார்க்கவில்லை. பிரதிவாதிகள் செல்லையா, வீராயி ஆகியோர் என்ன கட்சி செய்கிறார்கள் என்பது தெரியுமா என்றால் வழக்கு சொத்து அவர்களுக்கு சொந்தமானது என்று கட்சி செய்கிறார்கள். வழக்கு சொத்திற்கு நாளது தேதியில் 1வது பிரதிவாதி பெயரில் பட்டா ஏற்பட்டுள்ள விபரம் தெரியுமா என்றால் நான் அதை பார்த்ததில்லை. நான் சாட்சி சொல்ல வருவதற்கு முன்பும் சாட்சி சொன்ன பின்னரும் வழக்கு சொத்திற்கு நாளது தேதியில் யார் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்பதையும் யார் வரி வாய்தா

கட்டிவருகிறார்கள் என்பதையும் வாதியிடம் கேட்டு தெரிந்துகொண்டேன். நாளது தேதிவரை வாதியின் பெயரில்தான் வழக்கு சொத்திற்கு பட்டா உள்ளது என்றும் வாதிதான் வரி வாய்தா கட்டி வருகிறார் என்றும் வாதி என்னிடம் கூறினார். வழக்கு சொத்திற்கு நாளது தேதிவரை 1ம் பிரதிவாதி வீராயி பெயரில் பட்டா ஏற்பட்டு அவர்தான் வரிவாய்தா செலுத்தி வருகிறார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது ஆனால் மெய்யப்பன் பெயரில்தான் பட்டா உள்ளது அவர்தான் வரிவாய்தா செலுத்தி வருகிறார். மெய்யப்பன் பெயரில் பட்டா உள்ளது அவர்தான் வரிவாய்தா செலுத்திவருகிறார் என்பதை மெய்யப்பன் கூறி தெரிந்துகொண்டேன். வழக்கு சொத்திற்கு 1ம் பிரதிவாதி வீராயியின் கணவர் மலையப்பன் மகன் வேலு பெயரில் பட்டா ஏற்பட்டிருந்தது என்றாலும் அவரது இறப்பிற்கு பின்னர் அவரது மனைவியான 1வது பிரதிவாதி பெயருக்கு பட்டா ஏற்பட்டது என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனக்கு கையெழுத்து மட்டும் போடத்தெரியும். எழுதபடிக்க தெரியாது. வழக்கு சொத்திற்கு சர்வே எண் எனக்கு தெரியாது. வழக்கு சொத்து எவ்வளவு விஸ்தீரணம் உடையது என்பதும் எனக்கு தெரியாது. வழக்கு பற்றிய விபரமோ, வழக்கு சொத்து பற்றிய விபரமோ எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரியல்ல. வாதியின் போர்வெல்லிலிருந்து கிடைக்கும் தண்ணீரை பெற்று நான் விவசாயம் செய்து வருவதாலும் அவருக்கு நெருங்கிய உறவினர் என்பதாலும் உண்மைக்கு மாறாக வாதி கேட்டுக்கொண்டதன்பேரில் அவருக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து ஆரம்பத்திலிருந்து நாளது தேதிவரை 1ம் பிரதிவாதியின் ம.வேலுவின் அனுபவத்திலிருந்து அவருக்கு பின்பு அவரது மனைவி 1வது பிரதிவாதி வாரிசு முறையில் அடைந்து அனுபவம் செய்து வந்து அதனை 2ம் பிரதிவாதி செல்லையாவிற்கு இனாம்செட்டில்மென்ட் செய்து கொடுத்துள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்கண்ட இனாம்செட்டில்மென்ட்டிற்கு பின்னர் 2வது பிரதிவாதி செல்லையா வழக்கு சொத்தினை அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. அவரது அனுபவத்தில் இல்லை. 2வது பிரதிவாதி செல்லையாவின் அனுபவத்தில்தான் வழக்கு சொத்து உள்ளது. நான் வழக்கிற்காக இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.